# මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
# நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
# MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: DFD/ GAMP/ 2019 - 01
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2019.01.04


**சுற்றுநிருப இல: MFMM/ DFD/ 01/ 2019**

அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும்,

***கம்பெறளிய* – துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் – 2019**

2019.01.02 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைவாக, நாட்டின் தரமான உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் அதேவேளை, மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்துவதற்கும் துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இதற்கமைவாக, 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட *கம்பெறளிய* என அழைக்கப்படும் துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பன்னிரண்டு விடயங்களை உள்ளடக்கியதாக துரிதப்படுத்தப்பட்ட அடிப்படையில் செயற்படுத்தப்படும்;

**கம்பெறளிய**

**அட்டவணை: துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2019**

| கருத்திட்ட விபரம் | அலகு எண்ணிக்கை | செலவின வரையறை |
|---|---|---|
| 1.குளங்களும் அணைக்கட்டுகளும் | 1,400 | குளமொன்றுக்கு ரூ. 4 மில். |
| 2. பாதைத் துறை உட்கட்டமைப்பு | | |
| கிராமிய பாதைகள் | 10,850 | அலகொன்றுக்கு ரூ.2 மில். |
| நகர துறை - குறுகிய பாதைகள் | 1,500 | அலகொன்றுக்கு ரூ.2 மில். |
| 3.சிறிய பாலங்கள் நிர்மாணம் | 150 | அலகொன்றுக்கு ரூ.3 மில். |
| 4. பாடசாலை துப்பரவேற்பாட்டு வசதிகள் | | |
| புதுப்பித்தல் | 4,000 | அலகொன்றுக்கு ரூ.100,000 |
| புதிய நிர்மாணம் | 500 | பாடசாலையொன்றுக்கு ரூ.1 மில். |
| 5. விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு மேம்பாடு | | |
| விளையாட்டு மைதானம் மற்றும் வசதிகள் மேம்பாடு | 500 | அலகொன்றுக்கு ரூ.2 மில். |
| 6.ஏனைய சமுதாய பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | |
| நகரத்துறை வடிகாலமைப்பு வசதி மேம்பாடு | 550 | அலகொன்றுக்கு ரூ.1 மில். |
| விவசாயத்திற்கான சிறியளவு நீர் வழங்கல் திட்டம் | 200 | அலகொன்றுக்கு ரூ.1 மில். |
| குடிநீருக்கான சிறியளவு நீர் வழங்கல் திட்டம் | 100 | அலகொன்றுக்கு ரூ.1 மில். |
| 7. வாராந்த சந்தை அபிவிருத்தி | 200 | அலகொன்றுக்கு ரூ.2 மில். |
| 8. சிறுவர் பூங்கா நிர்மாணம் | 500 | அலகொன்றுக்கு ரூ.3 மில். |
| 9. தேவையுடைய குடும்பங்களுக்கான மின்சார வசதி | 100,000 | அலகொன்றுக்கு ரூ.30,000 |
| 10. விகாரைகள்/கோயில்கள்/தேவாலயம்/பள்ளவாசல்கள் புனரமைப்பு | 1,300 | அலகொன்றுக்கு ரூ.1 மில். |
| 11. சமய ஸ்தலங்களுக்கான சூரிய சக்தி மின்வசதி **(பின்னிணைப்பு I)** | 1,600 | அலகொன்றுக்கு ரூ.500,000 |
| 12. கிராமிய, நகர வீடமைப்பு அபிவிருத்தி - நிரந்தர கூரைகளை மாற்றுதல் ***(செலவின வரையறைக்குள் சமுதாயப் பங்களிப்புடன் தற்காலிக வீடொன்றை நிரந்தர வீடொன்றாக மாற்றுவதும் ஏற்புடையதாகும்).*** | 25,000 | அலகொன்றுக்கு ரூ.300,000 |

03. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 2019 ஆம் ஆண்டுக்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்கினூடாக ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் மீதி ரூபா 100 மில்லியன் 2019 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளிலிருந்து வழங்கப்படும். இந்தவகையில் மேற்குறிப்பிட்டதற்கமைவாக கருத்திட்டங்களை தெரிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

04. இந்நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களினால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்கள் பின்வருமாறு;

(அ) *கம்பெறளிய* நிகழ்ச்சித்திட்டம் மாவட்டச் செயலாளர்களின் ஒருங்கிணைப்புடன் பிரதேச செயலாளர்களினால் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பிரதேச செயலாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் கருத்திட்ட முன்மொழிவுகள் அனைத்தையும் கண்காணிப்பதற்கு உங்களது தலைமையின் கீழ் மாவட்டக் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு பிரதேச செயலகத்தினதும் முன்னுரிமைத் தேவைகளை பிரதிபலிக்கின்ற அதேவேளை, மக்களின் ஆகக்கூடிய நன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் மாவட்டச் செயலாளர்கள் கருத்திட்டங்களை இனங்காணுதல் வேண்டும்.

(இ) மேற்குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விசாலமான வேலைப் பணிகளுள் கருத்திட்டங்களை தெரிவு செய்கின்ற போது பின்வரும் காரணிகளை மாவட்டச் செயலாளர்கள் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்: சமுதாய நலன் மற்றும் ஏற்றுக் கொள்ளல், வறுமை தணிப்புக்கு கவனம் செலுத்தல், உற்பத்தி மற்றும் வருமான மேம்பாடு, பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வளங்களின் ஆகக்கூடிய பயன்பாடு, கருத்திட்டத்தின் நிலைபேறான தன்மை மற்றும் உள்நாட்டு சமூகங்களின் பங்குபற்றுகை.

(ஈ) மாவட்டச் செயலாளர்களினால் கருத்திட்டப் பட்டியல் சிபாரிசு செய்யப்பட்டதுடன் அது நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் அமைந்துள்ள *கம்பெறளிய* செயலகத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(உ) மேலே அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கையினை விஞ்சாத வகையில் ஒவ்வொரு அபிவிருத்தி துறையின் கீழுள்ள கருத்திட்டங்களின் மொத்தப் பட்டியலினை *கம்பெறளிய* செயலகம் உறுதிப்படுத்தும்.

(ஊ) 2019.08.31 ஆந் திகதிக்கு முன்னர் கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்படுவதனை மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(எ) மேலே அட்டவணையில் இனங்காணப்பட்ட அனைத்துக் கருத்திட்டங்களினதும் செலவினம் பொறியியல் மதிப்பீடுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மதிப்பிடப்பட்ட இறுதிச் செலவினம் மேலே அட்டவணையில் சுட்டிக் காட்டப்பட்டவாறு "செலவின வரையறை" யினை விஞ்சுதலாகாது. ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமான செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும் பிரதேச செயலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப மட்ட அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். தொழில்நுட்ப சேவைகளை, மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தேவை ஏற்படும் பட்சத்தில் இளைப்பாறிய தொழில்நுட்ப அலுவலர்கள் / பொறியியலாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ஏ) அனைத்து ஒப்பந்தங்களும் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்களின் நியதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இது தொடர்பாக 2012.01.05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபம் மற்றும் 2018.07.09 ஆந் திகதிய பொது நிதி பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 34 ஆம் இலக்க பிற்சேர்க்கையின்பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஐ) மொத்தச் செலவின மதிப்பீட்டில் 3 சதவீதத்தினை விஞ்சாத தொகையொன்று மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கான கருத்திட்ட நிர்வாகச் செலவினங்களை ஈடு செய்வதற்காக வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய நிர்வாகச் செலவினங்களில் எரிபொருள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், காகிதாதிகள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிர்வாகச் செலவினங்கள் இறுதி கருத்திட்ட செலவினத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும் என்பதனால் ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமாக வழங்கப்பட்டுள்ள செலவின வரையறையினை விஞ்சுதலாகாது.

(ஒ) நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பன நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள *கம்பெறளிய* செயலகத்தினால் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். நிகழ்ச்சித்திட்டத்தினை மீளாய்வு செய்வதற்கும் *கம்பெறளிய* செயலகத்தின் கருத்திட்ட பணிப்பாளருக்கு முன்னேற்ற அறிக்கையினை வழங்குவதற்கும் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மாவட்ட மற்றும் பிரதேச மட்ட கண்காணிப்பு முறைமையொன்றினை தாபித்தல் வேண்டும்.

(ஓ) மாவட்டச் செயலாளர்கள் பிரதேச செயலாளர்களுடன் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தினை நடாத்தி அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் கருத்திட்டப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். பிரதேச செயலாளர்களினால் அறிக்கையிடப்பட்டவாறு ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் கருத்திட்டப் பணிப்பாளருடன் கலந்துரையாடி அவற்றை உடனடியாக திருத்துவதற்கு உரிய நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

(ஔ) வழங்கப்பட்டுள்ள வடிவமைப்பில் பெயர்ப் பலகையொன்று (4′X2.5′ அளவில்) தயாரிக்கப்பட்டு கருத்திட்ட ஆரம்பத்தில் இரண்டு இரும்பு கம்பிகளில் (GI Pipes) அதனைப் பொறுத்துதல் வேண்டும். பெயர்ப் பலகைக்கான செலவினம் 6,000 ரூபாவினை விஞ்சக்கூடாது என்பதுடன் அத்தொகை கருத்திட்ட செலவின மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும்.

(க) *கம்பெறளிய* நிகழ்ச்சித்திட்டத்திற்கான வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலவல்கள் அமைச்சினூடாக தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கருத்திட்டப் பணிப்பாளர் நிதியினை விடுவிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(கா) *கம்பெறளிய* நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளும் திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்தாலோசனை செய்வதன் பேரில் 2019.09.30 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படுவதனை மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(கி) கருத்திட்ட செயற்படுத்துகையின் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும். பிழைகள்/ தாமதங்கள்/ தவறுகள் என்பன ஏற்படுமாயின் உடனடியாக பிரதேச செயலாளர்கள் மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் உரிய வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகளுக்கு கருத்திட்டப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

இச்சுற்றுநிருபத்தின் உள்ளடக்கத்தினை உடனடியாகச் செயற்படுத்துவதற்கு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் தயவு செய்து அறிவிக்கவும்.

**ஒப்பம்: ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. செயலாளர், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலவல்கள் அமைச்சு
4. செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
5. செயலாளர், விவசாயம், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு
6. செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
7. செயலாளர், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு
8. செயலாளர், மின்வலு, எரிசக்தி, மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சு
9. தலைவர், இலங்கை மின்சார சபை
10. மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
11. பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்
12. அனைத்து பிரதேச செயலாளர்கள்
13. கணக்காய்வாளர் நாயகம்
14. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
15. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
16. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
17. கருத்திட்ட பணிப்பாளர், கம்பெறளிய நிகழ்ச்சித்திட்டம்

## சமய ஸ்தலங்களுக்கான சூரிய சக்தி வசதிகளை வழங்குதல்

பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

(i) உரிய கொள்வனவுச் செயன்முறையினை பின்பற்றுவதன் மூலம் பொறுத்தமான சூரிய சக்தி உபகரண வழங்குநர் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ii) வழங்குநர் பேண்தகு சக்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) வழங்குநர் மேலதிகமான சக்தியினை தேசிய இணைப்பிற்கு வழங்குவதற்கான அங்கீகாரத்தினை மின்சார சபை (CEB) மற்றும் லங்கா மின்சாரக் கம்பனியிலிருந்து (LECO) பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) வழங்குநர் தமது உற்பத்திகளுக்கான ஆகக்குறைந்த உத்தரவாதத்தினை பின்வரும் வகையில் வழங்குதல் வேண்டும்.

(அ) சூரியக் கள தகடு (Solar Panel) - 25 வருடங்கள்

(ஆ) இன்வேர்ரர் (Inverter) - 10 வருடங்கள்

(v) ஆதன உரிமையாளர் இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படுதல் வேண்டும் என்பதுடன் உடன்படிக்கை சூரிய சக்தி வழங்குநரினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.